Serial number and name of the member.	Subject.
14 Thiru N. Marudhachalam	Failure to take action by the Pothanur Police Sub Inspector in a murder case in Kuruchi village in Coimbatore District.
15. Thiru K. T. K. Thangamani	Police lathi charges on the Textile Workers' Procession on 1-3-1972 in Gudiyatham, North Arcot District.
16. Thiru J. James	Bus accident at Thallapuram near Chingleput on the night of 3-3-1972.

இந்தத் தீர்மானங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பல நிகழ்ச்சிகள் பற்றியெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள், நிதிநிலை அறிக்கையின் பொது விவாதத்தின் மீதும், மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தின் போதும் நிதி ஒதுக்கிடு மசோதாவின் மீதான விவாதத்தின் போதும் விவரமாகப் பேசுவதற்குப் போதுமான வாய்ப்புகள் இருக்கின்றன. ஆகவே, இந்த ஒற்றிவைப்புத் தீர்மானங்களைப் பற்றி விவாதிக்க வேண்டிய அவசியமில்லையென்று கருதி, இவற்றைக் கொண்டு வருவதற்கான அனுமதி மறுக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(4) அறிவிப்பு

பேரவை அலுவல் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 4-3-1972-ம் நாள் நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் எடுத்த முடிவிற்கிணங்க 1972–73-ம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பிற்காக ஒதுக்கப்பட்ட முதல் நான்கு நாட்களின் விவரம் ஏற்கனவே உறுப்பினர்களுக்கு அச்சிட்டு அனுப்பியுள்ளவாறு நடைபெறும்.